உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 6 | இரௌத்திரி, ஸ்ரீ வைகாசிமீ -1920ஸ்ரீ மேமீ<br>,, ஆனிமீ ,, ஜூன்மீ | இதழ் 5-6 |
| --- | --- | --- |


| உள்ளுறை. | பக்கம். |
| --- | --- |

| சுந்தரமூர்த்தி நாயனார் துதி ... ... ... | 81 |
| சிவஞானபோதம் ... ... ... | 82 |
| பசுபாசங்களின் அனாதித்துவம் ... ... ... | 87 |
| அர்ச்சாதீபம் ... ... ... | 89 |
| ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் ... ... | 93 |
| அறம் ... ... ... | 97 |
| திருஞானசம்பந்தப் பெருமானார் பிருதாவளி ... ... | 99 |
| ஷை அஷ்டோத்தர விம்சதி நாமாவளி | 100 |
| சமயபேதம் ... ... ... | 101 |
| சந்தாதாரர்களுக்கு விஞ்ஞாபனம் ... ... ... | 103 |



பத்திரிகாசிரியர்

இருக்கம் - ஆதிமூலமுதலியார்,

(Retired Accountant, Military Accts., Department.)

* நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.


———o———

அச்சுக்கூடம் இடம் மாறுவதனால் * இவ்விலாசத்திற்கே கடிதங்கள் அனுப்புதல்வேண்டும்.

———o———


வைதிக சைவ அச்சுக்கூடம்.

1920.

# சைவம்—முதல் ஐந்துமலர்.

---

சென்ற இரண்டு வருடங்களில் பலர் முதலிலிருந்து எல்லா மலர்களும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்ததனால் இது வரையில் குறைவாயிருந்த இதழ்களை மீண்டும் அச்சிட்டு இருநூறு பிரதிகள் சித்தப்படுத்தி, 1915ஆம் முதல் 1919ஆம் வரையில் வெளிவந்த முதல் ஐந்துமலர்களையும் ஒன்றாய்ச்சேர்த்து காலிகோ கட்டடம் செய்து வைத்திருக்கிறோம். இதுவரையில் கட்டடம் செய்யப்படாமலே இவைகள் 5-ரூபா வீதமாக விற்கப்பட்டன. இப்போதுள்ள பண அவசரத்தால் (கட்டடம் செய்வதற்குப் பிரதி ஒன்றுக்குப் பத்தணாவீதம் நேரிடும் செலவையும் கருதாமல்) காலிகோ கட்டடம் செய்யப்பட்டுள்ள 5 மலர்களையும், 150 பிரதி வரையில், தபால் செலவுட்பட ஐந்துரூபாவுக்கு அனுப்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

# விலாசம் மாறுதல்.

---

சந்தாதாரர்கள் இனி எமக்கு எழுதுங் கடிதங்களைச் சென்னை ஏழுகிணற்றை யடுத்த பாளையப்பன் வீதி சஅ-வது இலக்க வீட்டு விலாசத்திற்கே அனுப்புக.

பத்திரிகாசிரியர்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| | | |
|---|---|---|
| மலர் 6 | இரௌத்திரி ௵ வைகாசி ௴ — 1920 ௵ மே ௴<br>" ஆனி ௴ ,, ஜூன் ௴ | இதழ் 5-6 |


## சுந்தரமூர்த்திநாயனார் துதி.

கதமெறி நேமி தூண்டிக் கராங்கவர் குரவ னீன்ற
மதலையை யழைத்த செங்கண் மாலென வருந்து ரும
லதிர்கட லமிர்த மன்ன வருந்தமிழ்ப் பதிகம் பாடி
முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வனை வழுத்தல் செய்வாம்.

(இ-ள்.) வேகத்தோடு செல்லும் பிரகாசம் பொருந்திய இரதத்தைச் செலுத்தி முதலைவிழுங்கிய தமதாசிரியன்புதல்வனை வரவழைத்து ஆசிரியனுக்குக்கொடுத்த செவ்விய கண்களையுடைய விஷ்ணுமூர்த்தியைப்போல வருத்தமடையாமல், ஒலிக்கின்ற திருப்பாற்கடலி லுதித்த அமுதத்தையொத்த அரிய தமிழ் வேதமாகிய திருப்பதிகமொன் றோதியருளி முதலைவிழுங்கிய பிள்ளையை வருந்தி நின்ற தாய் தந்தையர்க்கு அதன் வாய்வழி வருவித்துக் கொடுத்த முதல்வராகிய சுந்தரமூர்த்திநாயனாரைத் துதிப்போம். (எ-று.)

"கராங்கவர் குரவ னீன்ற மதலையை யழைத்த செங்கண்மால்" என்பதன் விவரம்.

அவந்திதேசத்திலுள்ள சாந்தீவினி யென்பவரைக் கிருஷ்ணனும் பலராமனும் வித்தியாகுருவாகக்கொண்டு வேதாகமங்களைக்கற்றுணர்ந்தனர். பிறகு கண்ணன் ஆசிரியரை வணங்கி "உமக்கு வேண்டிய குருகாணிக்கை யாது" எனக்கேட்க, அவர் தமது பத்தினியாரைக் கேட்டனர். அவர் மனைவி "சிறிது காலத்திற்குமுன் சமுத்திரஸ்நானஞ் செய்கையில், அலையில் அகப்பட் டிறந்த நமது புத்திரனைக்கேளுங்கள்" என்று சொல்ல, அவ்வாறே கண்ணனைக்கேட்டனர். உடனே கண்ணன் தன் அண்ணனுடன் தேரேறி வருணலோகம் அடைய, அதுகண்ட வருணன் கண்ணனை வணங்கி "வந்தகாரணம் யாதென" கண்ணன் "கடலாடுகையி லிறந்த எம தாசிரியர் புதல்வனைத் தருக", என, வருணன் "கடலில் வசிக்கும் பாஞ்சசனன் என்னு மவுணன் விழுங்கிவிட்டான்" எனக்கேட்ட கண்ணன் கடலிற்பாய்ந்து அங்கு துயிலும் அசுரனது நெஞ்சைப்பிளந்து அதனுள்ளிருந்த சங்கைக் கைக்கொண்டு தேரேறி இயமனுலகடைந்து சங்கைப் பூரித்தனன். அவ்வோசைகேட்ட இயமன் விரைந்தோடிவந்து வணங்கி

இங்குவந்த காரணம் யாதெனக் கேட்டுணர்ந்து புதல்வனைத் தரக் கண்ணன் அப்புதல்வனை ஆசிரியர்முன் கொணர்ந்து விடுத்தனன்.

"முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வன்". என்பதன் விவரம்.

திருவாரூரில் பரவைநாச்சியார் திருமாளிகையிலிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் மலைநா டடைந்து சேரமான்பெருமாணாயனாரைக் காணவேண்டு மென்னும் விருப்போடு புறப்பட்டு வழியிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டுவருகையில், கொங்கதேசத்தில் திருப்புக்கொளியூ ரென்னுஞ் சிவஸ்தலத்தை யடைந்தனர். அவ்வூர்ப் பிராமணவீதியாகச் செல்லுகையி லெதிரெதிராகவுள்ள இரண்டு வீடுகளில் ஒன்றில் மங்கலவோசையும் மற்றொன்றில் அழுகுரலுங்கேட்டு, அங்குள்ள வேதியரை நோக்கி "இஃதென்ன" வெனக்கேட்க அதற் கவ் வந்தணர் வணங்கி "இவ்விரண்டு வீடுகளிலு முள்ள ஐந்தாண் டுடைய பார்ப்பனச்சிறுவர் ஓர் மடுவில் நீராடுகையி லொருவனை முதலை விழுங்கியது. பிழைத்துவந்த சிறுவனுக் கிவ்வீட்டி லுபநயனமாகின்றது. இறந்துபோனவன் சுற்றத்தவ ரவ்வீட்டி லழுகின்றனர்" என்று சொல்லக்கேட்ட எமது சுந்தரமூர்த்திநாயனார் திருவுளமிரங்கப் புதல்வனையிழந்த பிராமணனும் மனைவியும் வணங்கிநிற்ப "உமது புத்திரனையா முதலையுண்டது?" எனக் கேட்க, அதற் கவர்கள் "அஃது முன்னடந்தது. தேவரீரைக்காண நெடுநாளாக விரும்பிய எமதிச்சை வீணாகாமல் தெரிசனமாயிற்று" எனமகிழ் கொண்டிருப்பதைக் கண்ட எமது நாயனார் "இவர்கள் புதல்வனையிழந்தது மெண்ணாது எமது வருகைக்குக் களித்தன ராதலின் இவர் புத்திரனை யெழுப்பிக்கொடுத்துப் பின்னரே அவிநாசியப்பரை வணங்குவோம்" என்று அவர்களை நோக்கி "உமது பிள்ளையை முதலை விழுங்கிய மடுவெங்கே" என அவர்கள் காண்பித்தனர். அதன் கரைமேலிருந்து ஓர் திருப்பதிகமோதித் துதிக்க யமன் முதலைவாயிற்பட்டதுமுத லதுகாறும் கழிந்த வயதுகளின் வளர்ச்சியுமுதிர்ந்திருக்கும்படி அப்பிள்ளையி னுடலை முதலைவயிற்றிற் புகுத்த முதலை கரையி லுமிழ்ந்தது. அப்பிள்ளையின் தாய்தந்தை முதலானவர்கள் வணங்கினர். சுந்தரமூர்த்திநாயனார் அச்சிறுவனுக் குடனே யுபநயனஞ் செய்வித்தனர்.

---

## சிவஞானபோதம்.

( 52-வது பக்கத் தொடர்ச்சி. )

### ஒன்பதாஞ் சூத்திரம் - மூன்றும் அதிகரணம்.

விதியெண்ணுமஞ்செழுத்தே.

(இ-ள்.) திருவைந்தெழுத்து விதிப்படியறிந்து கணிக்கப்படும் (எ-று.)

இதில் 1-வது-தன்னுற் கூறப்படும் பொருள்—ஞானம் பிரகாசித்தபின்னர் ஸ்ரீபஞ்சாக்கரத்தைவிதிப்படி உச்சரித்தல்வேண்டும்.

2-வது - ஐயப்பாடு — ஞானம் பிரகாசித்த பின்னும் செய்ய வேண்டுவதுண்டோ, இல்லையோ.

3-வது - பிறர் கூறும்பக்கம் — ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறெனக் கண்டு பாசத்தினின்றும் நீங்கியபோது பிறவி வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் விளங்கித் தோன்றுவதாகிய ஞானசொரூபமே அரன் கழல்சேறலாகிய சிவானந்த போகப்பயனைப் பயப்பிக்கும். ஆதலால் ஞானம் பிரகாசித்த பின்னர் செய்யக் கடவதாகிய சாதகம் இல்லை.

4-வது - மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு — வேம்பினைத் தின்றுகொண்டிருந்த புழு அதைவிட்டுக் கரும்பினைத் தின்னத் தொடங்கிக் கரும்பின் சுவையையறிந்தபின்னரும் முன்னிருந்த பழக்கவாதனையால் மீட்டும் அவ்வேம்பினை நோக்குதல்போல், ஆன்மா பாசத்தினின்றும் நீங்கி ஞானம் பிரகாசித்து ஞேயத்தைக் கண்டு எங்குந் தானாகி நிட்டை கூடியவிடத்தும், தொன்றுதொட்டு வரும் ஏகதேசப் பழக்க விசேடத்தால் அதன் அறிவானது புறத்தே விடயத்திற்சென்று பற்றும். ஆதலால் தன் அறிவை அவ்வாறு செல்லாது மடக்கி, அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி நிட்டைகூடி நிற்கும முறைமையை அஞ்செழுத்தோதும் முறைமையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்க, அது சிவதரிசனத்தை விளக்கி, வாதனை வயத்தால் புறத்திற்சென்று பற்றும் ஏகதேச அறிவைப் பற்றறத் துடைத்துப் பூரணநிலையில் கொண்டுசெல்லும். ஆதலால் ஞானம் பிரகாசித்த பின்னரும் விதிப்படி திருவஞ்செழுத்தை விதிப்படி யுச்சரித்தல் இன்றியமையாததாம்.

5-வது - இயைபு — உதாரண வெண்பா.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி — லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

இவ்வெண்பா ஸ்ரீ பஞ்சாக்கர செபம் எங்ஙனம் வாசனையை நீக்கும் என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு = ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்துக் கண்டு — இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து = தன் உடம்பினகத்தே இதயம் நாபி புருவநடு என்னும் மூன்றினையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியா

னத்தானமாகக் கருதிக்கொண்டு, புறம்பே ஞானபூசை செய்யும் முறைப்படி இதய கமலத்தில் சிவனை அவ்வஞ்செழுத்தால் அமைந்த திருமேனியில் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் அட்ட புட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து—அஞ்செழுத்தால்குண்டலியின் ஓமஞ்செய்து—குண்டலித் தானமாகிய நாபியில் ஞான வனலை யெழுப்பி அதன்கண் அத்திருவைந்தெழுத்தானே விந்துத் தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடி ஆகிய சுருக்குச்சுருவங்களால் ஓமஞ்செய்து—கோதண்டம் சானிக்கில்=விந்துத்தானமாகியபுருவநடுவில் சிகார யகார வகாரங்கள்முறையேதற்பதப்பொருளும் துவம்பதப்பொருளும் அசிபதப்பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தால் சிவோகம் பாவனை செய்யின்—அங்கு ஆம் அண்டன் சேடன் ஆம்=அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் (சேட சேடிப பாவத்தால் ஆகற்பாலதாகிய) அடிமையாம் (எ - று.)

கோதண்டம் = கோதண்டத்தின்கண் = புருவநடுவில். அண்டன் = அண்டனுக்கு. சேடன் = அடிமை. சுருக்குச்சுருவங்கள் என்பன ஓமத்தில் நெய்யைச் சொரியும் துடுப்புகள்.

பஞ்சாக்கரமாவது தூலபஞ்சாக்கரம் சூக்குமபஞ்சாக்கரம் அதிசூக்குமபஞ்சாக்கரம் என மூவகைப்படும். நகரத்தைமுதலாகவுடையது தூலபஞ்சாக்கரமும், சிகரத்தைமுதலாகவுடையது சூக்குமபஞ்சாக்கரமும், நகரமகரங்களிரண்டுமின்றி ஏனையமூன்றெழுத்தும் முன்னும் பின்னுமாய் மாறுதலால் ஐந்தெழுத்தாகிச் சிகரத்தை முதலாக உடையது அதிசூக்குமபஞ்சாக்கரமுமாம். அதிசூக்கும பஞ்சாக்கரம் காரணபஞ்சாக்கரமும் முத்திபஞ்சாக்கரமுமாம் இதுவே இவ்விடத்திற் கூறியதுமாம்.

சாந்தோக்கிய உபநிடத்திலுள்ள தத்துவமசி மகாவாக்கியம் தற்பதம் துவம்பதம் அசிபதம் என மூன்று பதங்களையுடையது. அவற்றுள் தற்பதம் இறைவனுடைய தடத்த நிலையாகிய பதித் தன்மையினையும், துவம்பதம் உயிரின் தடத்த நிலையாகிய பசுத் தன்மையினையும், அசிபதம் இவ்விரு பொருள்களின் சொரூப நிலையாகிய ஐக்கியத்தையும் உணர்த்தும். அவ்வாறே, ஸ்ரீபஞ்சாக்கரத்தில் சிகரம் பதியையும், யகரம் பசுவையும், வகரம் இவ்விரண்டின் ஐக்கிய நிலையாகிய அருளையும் உணர்த்தும். ஆதலால் முத்திபஞ்சாக்கரம் சித்தாந்த மகா வாக்கியமாவதறிக.

மந்திரங்களை உச்சரித்தல் மானதம், மந்தம், உரையென மூவகைப்படும். மனத்தாற்பாவித்தல் மானதமும், சூக்கும வைகரி

வாக்கால் தன் செவிக்குமட்டும் கேட்கும்படி உச்சரித்தல் மந்தமும், தூலவைகரிவாக்கால் தனக்கும் பிறர்க்கும் கேட்கும்படி உச்சரித்தல் உரையுமாம். வாக்கின் கலப்பின்றி தனித்து அறிவு ரூபமாய் நின்று பாவித்தலாகிய சுத்தமானதமே இவ்விடத்தில் வேண்டப்படலால் சூத்திரத்தில் உச்சரிக்க என்னது "எண்ணும்" என்றனர்.

இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாணு மோதஞ் செழுத்து.

இவ்வெண்பா, மேலைவெண்பாவிற் கூறியவாறு, அஞ்செழுத்தோது முறையால் ஒருகுறியின் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் கூடாதென்பதையும், அவ்வாறு கண்டவிடத்து முதல்வன் தன்னிடத்தில் விளங்கித் தோன்றுதலையும், தோன்றிய விடத்துத்தான் அம்முதல்வனுக்கு அடிமையாதலையும் உவமை வாயிலாக உணர்த்தி அதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்-) இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு=(அந்தரத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நவக்கிரகங்களுள் மற்ற எழு கிரகங்களைப்போல் காணப்படாத) இராகு கேதுக்களைக் கிரகண காலத்தில் சந்திர சூரியரிடத்திற் காணுமாறுபோல்—சிந்தையில் காணில்=(பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்களுள் யான் இதனை அறிந்தேன் இதனை அறிகிலேன் என்னும் உணர்விற்கு விடயமாகக் காணப்படும் பசு பாசம் என்னும் இரண்டினைப்போல் வேறு காணப்படாத பதியாகிய முதல்வனைத்தன்) இதயத்தின்கண் (அஞ்செழுத் தோதுமுறையால்)காணுமாயின்—உந்தவே=(கோலை நட்டுக் கயிற்றினாற் சுற்றிக்) கடையவே—காட்டாக்கின் சிவம் தோன்றி=விறகினின்றும் தோன்றும் அக்கினிபோல் அம்முதல்வன் அங்கே தோன்றி—கண் ஆம்=அறிவுக்கறிவாய் விளங்கிநிற்பன்—தான் கனல்சேர் இரும்பு என்ன ஆள் ஆம்=அப்பொழுது தானும் கனலைச் சேர்ந்த இரும்புபோலத் (தன் சுதந்திரத்தைவிட்டு) அம்முதல்வனுக்கு அடிமையாம்—(ஆகலான்)—அஞ்செழுத்து ஓது=அவ்வஞ்செழுத்தை விதிப்படி ஒருதலையா ஞேதுக. (எ-று-)

இராகுவைப்போல் கேதுவும் சாயாக்கிரகமாதலால் கேதுவை வேறு கூறவில்லை. கண்=அறிவு. காட்டாக்கினியின் என்பது காட்டாக்கின் என விகாரமாயிற்று. காட்டம் விறகு. காட்ட அக்கினி=காட்டாக்கினி. இன் உவம உருபு.

மண்முத னாளமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சாதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்றா ணேர்.

இவ்வெண்பா, தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட முதல்வனை இதயத்துட்கண்டு பூசித்தல் எவ்வாறு கூடும் என்னும் ஆசங்கையை நீக்கி, அண்டத்தில் உள்ளனவெல்லாம் பிண்டத்திலும் சூக்குமமாய் அடங்கியிருத்தலினாலும், அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்தில் கமல ரூபமாய் விளங்குமாதலாலும், முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டு அங்ஙனம் வியாபகமாய் வயங்கும் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசித்தல் அமையும் என்பதைத் தெளிவித்தற் பொருட்டு அவ்விதய கமலத்தின் இயல்புணர்த்தி அதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) நண்ணில்=(இதயகமலத்தின் இயல்பை) உற்றறியப் புகின்—மண்முதல் நாளம் ஆம்=நிலம் முதலிய இருபத்துநான்கு தத்துவமும் (நாபியினின்றும் தோன்றும் எட்டுவிரல் அளவினதாகிய) நாளவடிவாம்.—வித்தைமலர் ஆம்=வித்தியா தத்துவமேழும் சுத்தவித்தையுமாகிய எட்டும் எட்டிதழ்வடிவாம்.— எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாரூபம் ஆம்.=அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுரதத்துவமும் சதாசிவதத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவாம்.— சத்தி கலை உருவாம்.=சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம்.— நாதம் அதன் கண்ணும்=சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவாம்.—ஆதலால்—அதில் சிவன்தாள் நிலையாம்.=அம்முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகக் கொண்டு அவற்றின் மேல் நிற்கும் முதல்வன் திருவடிகள் அவ்விதய கமலத்தின்மேல் நிற்கும்.—நேர்=அதனை அறிந்து பஞ்சாக்கரத்தாற் பூசைசெய்வாயாக. (எ-று.)

இவ்வெண்பாவினுக்கு அவ்வவ் வாகமம்பற்றி வெவ்வேறு பொருளுரைப்பாரும் உளர்.

வித்தை=வித்தியாதத்துவம் எனப்படும்கலாதியும் சுத்த வித்தையும். கலை அறுபத்துநான்காகலால் அஃது அறுபத்துநான்காகிய கேசரங்களுக்குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆகு பெயராயிற்று. ஈசர் என்றது ஆகுபெயராய் அவரால் அதிட்டிக்கப்படும் தத்துவத்தை உணர்த்தும். கலையுரு=கலைக்குள் உரு=கேசரங்களுக்குநடுவாய்விளங்கும்பொகுட்டு.இதயகமலமானதுநாளம்முதலாக

மேல்நோக்கித் தோன்றும் உலகத்திற் காணப்படும் கமலம்போலன்றி, கண்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றும் திவ்வியகமலமாம்.

நாளம்=பூந்தண்டு - பொகுட்டு=தாமரைக்கொட்டை. கேசரம் தாமரைப் பொகுட்டின் புறத்தே தொங்குவன.

———

## பசுபாசங்களின் அநாதித்துவம்.

("ஞானசித்தி" ப்பிரசுரம்.)

ஆன்மா பாசங்களோடு கூடியிருந்தலினாலே பசுவென்று சொல்லப்படும். அப்பசு சேதனமாயும் வியாபகமாயும் அருவமாயும் விளங்குதலினாலே நித்தமான பொருளாகும். நித்தமென்றால், தோன்றுதலும அழிதலுமில்லாதது. அது சேதனவஸ்துவாயினும் அவித்தை யுறுதலினாலே, அதற்குக்காரணமான ஆணவமலத்தைச் சார்ந்து நிற்கின்றதென்பது பெறப்படுகின்றது அந்த அவித்தையினாலே, மாயாதேகங்களையும் புண்ணியபாவ கர்மங்கள் செய்தலையும் விரும்புவதாயிற்று. இருளிலிருப்பது போல்வது ஆணவமலபந்தம். இருளுபாதி நீங்க விடஞ்சகமான விளக்கைவிரும்புவதுபோல்வது மாயாதேகங்களில் விருப்பம். விளக்கை விரும்புவது எதற்காகவென்று நோக்கில், அவ்விளக்கின்சகாயத்தால் தான்விரும்பிய தொழிலைச்செய்யவும், உண்ணுதல்முதலிய போகங்களை நுகர்தற்குமென்பது புலப்படும், அதுபோல, ஆன்மா சரீரத்தைவிரும்புவது தொழில்செய்தற்பொருட்டேயாம். அத்தொழிலே கன்மமென்று சொல்லப்படும்.

அறியாமை யுடைமை ஆணவமலகுணம். அறியாமையை ஏகதேசத்தில் நீக்குமாறுசார்ந்தது மாயாமலம். ஆணவமலகுணமாகிய அறியாமையோடு விருப்பு வெறுப்புற்றுப் பிறர்க்கு இதாகிதஞ் செய்தலால் விளைவது கன்மமலம். இப்படி மும்மலமும் ஆன்மாவைச்சார்ந்திருக்கும். முன்னில்லாத பாசத்தை உண்டாக்கி ஆன்மாவுக்குக் கடவுள்சேர்த்தாரென்னில், அவரது கருணைக்கு இழுக்காய்முடியுமாதலால், அதுபொருந்தாது. "இல்லதுவராது உள்ளதுபோகாது என்னும் நியமத்தால்" இல்லாத மலமாயை கன்மங்கள் புதுவதாக உண்டாகமாட்டா. உண்டாக்குதற்கு ஓரியைபு

மில்லை. ஆன்மாவைச்சார்ந்து உள்பொருளாயிருத்தலும் காண்கின்றோம். ஆதலால், அவை அநாதியவென்றேசொல்லவேண்டும்.

அநாதியாவது, உற்பத்தியில்லாதது. அறியாமையை விளைவிக்கும் ஆணவமலம் அநாதி. இந்த உடம்பும், உடம்பிலுள்ள கரணங்களும், உயிர்கள்வசிக்கும் உலகபேதங்களும், அங்குள்ள போகங்களும் ஆகிய தநுகரண புவனபோகங்களுக்குக் காரணமாயுள்ளது எதுவோ அதுவேமாயை. அந்தக்காரணமாயையே அநாதிப்பொருள். அம்மாயை நித்தமாயிருக்க அதன் காரியமாகிய உலகம்முதலியவை தோன்றி ஒடுங்கும். அக்காரியங்கள் அழிவனவன்றி மாயை அழியமாட்டாது.

இனி, கன்மமலமும் மூலகன்மம் காரியகன்மம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் மூலகன்மம் அநாதி. காரியகன்மம் ஆதி. உயிர்களாற் செய்யப்படுவனவற்றை இவை நன்மை தீமையென்று வரையறைப்படுத்துதற்கு எதுவாய்ப்பொதுமையில் நிற்பது காரண கன்மம். புண்ணியம்பாவம் எனப்படுங்கன்மம் ஒருவனுற்செய்யப்படுதற்கு முன்னும் இருக்கின்றது. உதாரணமாக, பசித்தவர்க்கு அன்னமிடுதல் புண்ணியம். ஒரு உயிரைக்கொலைசெய்தல் பாவம். இவை ஒருவராற்செய்யப்படுதற்கு முன்புபொதுமையில் புண்ணியம் பாவம் எனப்பெயர்பெற்று நிற்கும். புண்ணியத்தை அல்லது பாவத்தை ஒருவன் செய்தபொழுது அவை அவனைச் சார்கின்றன. முன்பு புண்ணியபாவத்தொழிலாய்கின்றதும், பின்பு அத்தொழிலை ஒருவன் செய்தபோது அவனை அத்தொழில் அடைந்து பயன் றருவதும் என இரண்டுவகையாய் பிரித்துநோக்கினல், அவனுற் செய்யப்படுதற்குமுன்னுள்ள நிலை காரணகன்மமும், அவனுற்செய்யப்பட்டு ஆகாமியமாய்ச் சஞ்சிதமாகிப் பிராரத்தநுகர்ச்சிக்கு வந்துகழியும்போது காரியகன்மமெனவும் பெயர்பெறும். காரிய கன்மம் இவ்வாறு ஆதியந்தமுடையதாய் ஒழியினும் காரணகன்மமோ நித்தமாயிருக்கும். அதுபற்றியே கன்மமலம் அநாதியாயுள்ளதென்பர்.

இங்ஙனம் ஆன்மாவும் அநாதி. ஆணவமலம் மாயாமலம் கன்மமலம் என்னும் பாசங்களும் அநாதியவேயாம்.

இனி இவை அநாதியவேயாயினும் ஆன்மாவுக்கும் பாசத்துக்குமுள்ள சம்பந்தம் அநாதியோ ஆதியோவென்னின், அநாதியாயுள்ள ஆன்மாவும் அவையும் முன்பு சம்பந்தமின்றியிருந்து இடையே சம்பந்தமுற்றன வாயின், அப்படியாதற்கு இவற்றுளொன்றைவிடவேறுமோரேதுவேண்டும். அன்றி முன்னரே சுத்த

மாயிருந்த ஆன்மாவை இடையே பந்தித்தமலம் முத்தியிற்சுத்தமாயிருக்கும் பொழுதும் வந்துகூடும். அன்றியும் முத்தியென்பது ஒன்று இல்லையாய்விடும். ஆதலின், இடையேவந்து பொருந்தியதென்பது அமையாது. ஆன்மாமலசம்பந்த முற்றிருக்கவுங் காண்கின்றோம். அதனால் அது அநாதியதென்றே சொல்லல்வேண்டும்.

இனி ஆணவமல சம்பந்தமே மாயைகன்மங்களின் சம்பந்தமுண்டாதற்கு ஏதுவாயிருந்தமையால், ஆணவமலம் மூலமலமென்றும் அதன்சம்பந்தம் சகசமென்றும் சொல்லப்படும். அதன்வழித்தாக மாயைகன்மங்களின் சம்பந்தம் நேர்ந்தமையால் அவற்றின் சம்பந்தம் ஆகந்துகமெனப்படும். ஆகந்துக மென்பதனால் அவை இடையில் வந்தனவென்பதும் அடாது. என்னை? மும்மலபந்தமும் அநாதியென்று நூல்கள் கூறுதலாலும், ஆணவமலத்தான் மறைப்புண்டிருக்கும்கேவலநிலையில் உயிர்க்குத்தாரகமாவது மாயையேயாகலானும் சிவத்தைத்தாரகமாகக் கொள்ளாதநிலையில் மாயையைவிட்டகன்றிருக்க வியலாமையானும், கன்மஞ்செய்தற்கேற்ற தன்மையும் அக்கன்மத்தொடர்பும் அநாதியேயிருந்து மாயாகாரிய வியஞ்சகமுண்டாயபோது கன்மத்தை உயிர் ஈட்டுதலானும், அம்மாயை கன்மங்களும் அநாதிசம்பந்தமுடையனவேயாம். ஆயினும் கேவலத்தில் ஆணவமலம் தன்மறைத்தற் றொழிலைச்செய்துகொண்டிருக்க, மாயை கன்மங்கள் காரியப்பாடுற்றுத் தொழில் செய்தலின்றிக், காரணரூபமாய் நின்று உயிர்க்கு யாதோருபாதியுஞ் செய்யாமையானும், அவைசகலத்திற் காரியப்பாடுற்று உபாதி செய்தலானும் அம்முறை நோக்கி, ஆகந்துக மெனப்படுமென்றுணர்க.

ஆதலின், ஆன்மாவும் மலமாயை கன்மங்களாகிய பாசமும் அநாதியவென்றே கொள்ளத்தக்கதாம்.

---

## அர்ச்சாதீபம்.

( 67-வதுபக்கத் தொடர்ச்சி. )

இனி, நம்மவர்கள் பரனது உருவத்தை விக்கிரகத்திற் கண்ணினாற்காண்பது கூடாதென்றபடியே அவனது கல்யாணகுணத்தை ஒலிவடிவாகிய வேதத்திற் காதினாற்கேட்பதும், வாயினாற்றுதிப்பதுங் கூடாது என்று சொல்லப் பின்னிடார்கள். இதனையும் அன்னோர் அவலம்பித்தால், அவர்களைப்பிடித்த சனி அப்போதேதொலையும். கேட்பதுங் காண்பதும் பேசுவதும் ஒழிந்துவிடுகின்றமையால், கருதுவதுங்கூடவே யொழிந்துவிடும். பரனொருவன் உளனென்று அவர் கருதுவதை அப்பெரியோனுக்கு மானியம் விட்டதாக மதித்து, நாங்கள் பரனை நினைக்கின்றோம் என்று கூறி, அவ்வ

ளவிற்றனே தாங்கள் ஞானிகளென்று மகிழ்ந்திருக்கின்றமையே
வைதிகர்களாகிய மேலோரிடம் போராடத் தூண்டுகின்றமையால்,
அந்தப்பரனிருப்பையும் ஒழித்துக்கொண்டால் அவர்கள் சுகமாய்
வாழலாம்! வாழலாம்!! நம்மதோழர் தங்களைவிட நாத்திகர் யா
ரோ வேறேயுளராகத் தங்கள் பத்திரிகைகளில் (நாத்திகர்) என்று
நிஷேதங் கூறுகின்றனர். சைவ வைஷ்ணவ சமயங்களிற் பிறந்தவர்
தம்முள், கரும்பு கசப்பது நாவின்குற்றம் என்பதுபோல அச்ச
மயவுண்மைகளை முற்றும் அறியப் புண்ணியம் போதாமையால்,
அவைகளைப் புரைமார்க்கங்களென்று கருதி, அவற்றை நிந்திப்ப
தையே பெருந்தவமெனக்கொண்டு, அறவே அவைகளையொழித்து
விடலாமென்றால், பெண்டு பிள்ளை மாதாபிதாக்களையுங்கூட!இழக்க
வருமேயென்று பயந்து, அப்படியும் இப்படியுமாகத் தியங்கித் திரி
பவர்களே இப்போது நாத்திகர் எனவும்,பிரஹ்மஸமாஜத்தாரென
வும் பிரவர்த்திப்பவர்களேயன்றி வேறில்லை. சைவமுதலிய சமயங்
களிலிருந்து அதீத ஞானத்தை யடைந்தவர்களாகத் தங்களை எண்
ணிக்கொண்டிருப்பவர் தம்முள் முதல்படியாளர் நமது ஸமாஜநண்
பரும், இரண்டாம் படியாளர் சுயஞானிகள் என்று தங்கள் காலைத்
தாங்களே கும்பிட்டு மகிழும் விவேகசிரோமணிகளுமேயாம். இவர்
களைப்போல இன்னும் அநேகம் படியாளர்கள் தினுசுதினுசாயுண்
டாவார்க ளென்பதில் ஸந்தேகமில்லை. இன்னோர் யாவரும் நாத்
திகக் குழுவில் முதல்வகுப்பு, இரண்டாம்வகுப்பு என்று கொண்
டாடும் பெருமையினரே யாவர். ஆகையால், நம்மவர் தங்களுக்கு
ரிய நாத்திகத்தை நாடாது, நாத்திகர் என்று வேறு யாரையோ
பிரஸ்தாபிப்பது குணஞ்செய்யாது. இவ்விருதிறத்தவரையும்யாம்
எப்படி யோசிக்கின்றோமெனின், தந்தைதாய் சொல்கேளாது திரி
யும் மைந்தர் பலர் உலகில் அப்பெரியோர்களை விட்டு அறவேயொ
ழிந்துபோகாமலும், வீட்டிலுஞ் சரியாகத் தங்கி வாழாமலுஞ் சீ!சீ!!
என்று யாவரும் வெறுக்க மகிழ்ந்திருக்கின்றார்களாகையால், அவர்
களோடொப்பவே கொண்டு நிஸ்புருஹமாக வொதுக்கியிருக்கின்
றனம். நம்மவர் நாத்திகர் என்று பிறரைக்கூறுவது தாம் பரனைக்
கருதுகின்ற யோக்யதையைப் பெற்றிருப்பதாகக்கொண்ட கம்பீ
ரமே யாகையால், அது கண் - காது - மூக்கு - வாக்கு முதலியவற்
றின் வியாபாரம்நேராதபோது நிலைக்குமா? நிலைக்காதா?என்பதை
முன்னர் யோசித்து முடிவு தேர்வாராக. காது - மூக்கு - வாக்கு
முதலியவற்றின் வியாபாரங்களைக் கூர்ந்தறியும் நுட்பம் போதா
மையே அன்னோர் கண்ணினது வியாபாரத்தைமாத்திரம் நிந்திக்கத்
தொடங்கியதாம். இந்த ஸூக்ஷ்மவிசாரத்தால் கண்-காது-மூக்
கு-வாக்கு-மனசு என்னும் நம்மவரது இந்திரிய - கரண வியாபார
மெல்லாம் ஒழிந்து சூந்யமாய்ப் போகின்றமையால், விக்கிரகத்தை
ஆராதிப்பது கூடாது, மனசினால் தியானிப்பது கூடும்; என்று

அவர்கள் கூறிவருவது குருட்டுவழியாக முடிந்தது. மனசினால் ஒன்றை நினைப்பது கண் - காது முதலிய இந்திரியவழியாலென்றே நிச்சயிக்கப்பட்டமையாலும், அந்தமனசு விகாரத்தன்மையுடையது ஆகையாலும், அது பரனை ஸாக்ஷாத்தாகத் தியானிக்கயோக்யமுடையதாகாது. அப்படிப்பட்ட மனசால் யாம் பரனைத் தியானிக்கின்றோமென்று பூர்வபட்சிகள் சொல்லுவதுங் கூடாது. அவர் சொல்வது என்போலுமெனின், மலடுகறந்த பாலருந்தினேன் என்று ஒருவன் கூறுவதுபோலாம்.

அதவா அவர்களது வெறுஞ்சொல்லை அங்கீகரித்து நாம் யோசிப்பினும் பெருஞ்சிரிப்பையே விளைக்கின்றது. அவர்கள் பிரஹ்மமொன்று இருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருப்பதே பிரஹ்மத்தை வழிபடுதலென்றும், அதுவே பிரஹ்மத்தியானமென்றும், அவ்வளவே யன்றிப் பிரஹ்மத்தை ஒருவராலுங் காணக்கூடாது என்றும்) அதைக்கண்டவரில்லையென்றுந்தீர்மானஞ்செய்துகொண்டிருக்கின்றார்கள். ஒருவன் சோறு என்று மனசினால் நினைத்துக்கொண்டு, அம்மட்டிலேதானே அவன் சோற்றையடையும் முயற்சி செய்துவிட்டதாகத் திருப்தியடைந்து, சோற்றையுண்டு களித்தலும் அதுவே யென்றுகூறி, அதற்கு வேறாக ஒருவன் சோறுண்டு மகிழ்ந்தானென்றால் அது பிசகென்றுங்கூறி மகிழ்வது எப்படியோ, அப்படியே நம்ம ஸமாஜநண்பரது அநுபவத்தையுங் கொள்ளவேண்டியது. பசியால்வருந்தியவொருவன்சோற்றைமனசினால் நினைத்துக்கொண்டு வாளாவிருந்தால் பசிதணியுமா? அதை நினைத்துக்கொண்டிருந்துவிடுதலே அதைத்தேடும் முயற்சியாய் விடுமா? அந்த நினைவே அதையுண்டு களித்தலும், பசித்துன்ப நீங்கலாகுமா? சோற்றை நேராகக்கண்டு உண்டு மகிழாமலே நம்மவராவது பசிதீர்ந்திருப்பார்களா? இதை யோசிக்கிறபோது சோறுகாணாத மூளியொருவன் அதைக் கஷ்டப்பட்டுத்தேடி அநுபவிப்பதொழிந்து சோம்பேறித்தனத்தால் வீண்பேச்சுகளைப்பேசி எண்ணியிடிந்து காலங்கழித்து இறக்கும் ஸாத்ருஸமே நம்ம நண்பரது பிரஹ்மாநுபவத்திலுஞ் சிறக்கும்! சிறக்கும்? ஆணவாந்தகாரத்தின்மூழ்கிஅதோகதியாக அழுந்துதலேஅதுவாம். தேகேந்திரியப் பிராணாந்தக்கரண தர்மங்களற்றவிடத்தில், கேவலம் ஆத்மஞானத்தா லறிந்து அநுபவிக்கத்தக்கது சிவமாகையால், அந்த நிலைக்கு எங்கித் தவம்புரியாதுபாழுக்குமுத்துலைபோட்டிறைக்கும் நம்ம பண்டிதர் கூற்று அதிசயத்தையே விளைக்கின்றது.

இது நிற்க, பிரஹ்மத்தை நினைப்பதனால், அது அவ்வளவி லிருப்பதன்றி அதை யொருவருங் காணக்கூடாது என்று நம்மவர் தெளிந்தார்கள். ஒருவன் ஒருபொருளை உண்டு என்பதும், அதை நினைப்பதும் அது தனக்கு விஷயமாகாதபோது பயனில்லை. பிரஹ்

மம் என்பதொன்று உண்டு என்பதும், அதை நினைப்பதும் அது தனக்கு வெளியாகாதபோது பயனில்லை. தனக்குப் பயனில்லாத வொன்றைப் பிரஹ்மம் என்று சிந்திப்பதும், அதை மகிமையாகக் கூறுவதும் தன் பிரயோசனத்துக்கு வராத முயற்கோட்டைப் பிரஸ்தாபித்து அதற்கு முழம் நூறு என்று பிரசங்கிப்பது போலவே முடியும். இந்த நுட்பவிசாரத்தால், பிரஹ்மத்தை யாம் மனசினால் தியானிக்கிறோம் என்று கூறும் ஆபாசம் அடியோடே மாய்ந்தது. இதுகாறுஞ்செய்த விசாரத்தால் மனசு ஒன்றினால் மாத்திரமே பிரஹ்மத்தை உபாசிக்கவேண்டியது என்னும் பூர்வபக்ஷிகளது மதம் வெளுத்தது.

இனி வைதிகராகிய எம்மவர் கூற்றை எடுத்துப் பிரகாசப்படுத்துவாம். கண்முதலிய இந்திரியங்கள் ஜடம். பிராணாதிகள் ஜடம். மநாதிகளும் ஜடம். இவைகளால் பிரஹ்மத்தை எட்டமுடியாது. செம்பு - கல் முதலிய விக்கிரகங்கள் பரனுருவப்போலச் செய்யப்படினும் அவையும் ஜடம். ஆகையால், அவை பிரஹ்மமாகமாட்டா. பிரஹ்மமோ தடையற்ற அறிவுக்குமாத்திரமே எட்டத்தக்கது. தடையற்ற ஞானத்தாலன்றிச் சிவத்தை எட்டமுடியாது. தடையற்ற ஞானம்பெற்றவர்கள் உலகில் ஏகதேசிகள். ஏனையோர் அத்தடையற்ற ஞானம்பெறாமையால், அவர்கள் பரனை எட்டுவதின்று. பரனே அவர்களுக்கு எட்டுவதின்று. ஞானிகள் பரனை எட்டியும், அவர்களுக்குப் பரன் எட்டியும் இயக்கப்பாடுண்டாவதால், ஜடங்களாகிய விக்கிரகங்கள் ஞானிகளுக்கு வேண்டப்படா. ஏனையோர்க்குத் தடையற்ற ஞானம் உண்டாகாமையாலும், அவரது இந்திரியங்களும், கரணங்களும் பரனை எட்டாவாகையாலும், ஜடமாகிய விக்கிரகங்கள் பரனல்லவாகையாலும் ஞானிகளல்லாதவர்க்கும் விக்கிரகங்கள் வேண்டப்படா. இங்ஙனமாகவிக்கிரகத்தைஆராதிக்கத்தக்கவர்கள் வேறுயாவர் எனின், அதற்கு விடை கூறுதும்.

ஞானிகள் தடையற்ற ஞானமுடையவர்களானவிடத்தும் அவர்களுக்குத் தேகநீங்குமளவும் தேகாதிகளின் விவகாரங்களிருக்கும். தேகாதிகள் கன்மேந்திரியம் - ஞானேந்திரியம் அந்தக்கரணம் என்னும் பிரிவுடன் விளங்கும். இவை இயங்கும்போது இவைகளுக்கு மலமாயாதிகளிற் பற்றுண்டாகமாட்டாது. இவைகளும் அந்தஞானிகளது சேர்க்கையால் பரிசுத்த மெய்தாநிற்கும். உப்பளத்திற் சேர்ந்த புல்லானது உப்பேயாய் விடுதல்போல. இதனை "ஆற்றலலைகடற்கே பாய்ந்தநீரந்நீர்மை, மாற்றியவ் வாற்றான் மறித்தாற்போற், றேற்றிப் - புலன்க ளெனப்போதம் புறம்பொழியு நந்த, மலங்களற மாற்றுவிக்கும் வந்து" என்னுஞ் சித்தாந்தச்செல்வர் திருவாக்குந்தெளிவிக்கும். ஆற்றிலே நின்றும் அலையையுடையகடலிலேபோய் விழு

ந்த நல்ல நீரானது தன்மைமாறிக் கடனீரேயாய் விடுவதும், மீண்டும் அக்கடலிலே நின்றும் அது ஓர்கால் திரும்பினும் அக்கடனீராகத் திரும்புவதல்லது ஆற்றுநீராகத் திரும்பாததுமாகிய உண்மையே இத்திருவெண்பாவாற் பெறப்படுகிறது. இதனையுய்த்துணருங்கால், ஞானத்தால் சிவனைக்கூடிச் சிவமாயிருக்கிற ஞானிகளுக்குத் தேகநீங்குமளவுமுள்ள விவகாரங்கள் யாவும் உலகவிவகாரமாகமாட்டா. பரனது விவகாரமாகவே முடியும். அன்னோர் பகிர்முகமாவதும் உலகத்துக்கு உபகரித்தற்கான திருவருட் பிரேரகமேயன்றி வேறில்லை. கடலிலே நின்றும் ஓர்கால் திரும்பிய நீரானது அங்ஙனம் திரும்புகையில், கடனீராகவே நிலைத்தலால், கடலாகிய சிவத்தின்றன்மைகண்டு,வெளிப்பட்டநீராகியசிவஞானிகளை வழிபட்டுய்ய வேதங்கள் விதிக்கும். அவ்வழிபாட்டால், சிவனை வழிபடுதலாய பெரும்பயன் எய்துவதும் ஸித்தம். ஞானிகளது தேகேந்திரியாதிகளின்றன்மை இவ்வியல்பினது என்று வெளிப்பட்டமையால், இவ்விந்திரிய கரணங்களாலும் இவர்கள் சிவனையெட்டுவதற்கு ஹேது உண்டாயிற்று. பூவோடு சேர்ந்தநாரும்பரனது முடியிலேறியதுபோல. இன்னும் விரிக்கிற் பெருகும்.

ஆயின், இவர்களது கரணங்கள் விக்கிரகங்களைக் காணுமோ? அவற்றுளதிஷ்டிதமாயுள்ள சிவத்தை நேரே காணுமோ? எனின், எதைக்காணுமிடத்தும், காணுதற்கு அதிஷ்டானம் ஞானமேயாகையாலும், அதில் வேறறக்கரணங்கள் புணர்ந்திருக்கின்றமையாலும், மேல்வினா உசிதம்பெறாது. எனவே, ஞானமாத்திரத்தால் நேரே சிவத்தையும், ஞானம், கரணம் இவைகளின் சையோகமாத்திரத்தால் விக்கிரகங்களிற் சிவத்தையுங் கண்டு ஆநந்திப்பரென்பது துணிபு.

---

## ஹரதத்தாசாரியசுவாமிகள் சரித்திரம்.

(64-வதுபக்கத் தொடர்ச்சி.)

பின்னர் சிலநாட்கழித்து, ஓர் பிராமணன் அக்கிராமத்திலே பசுக்களைப் பரிபாலனஞ் செய்துகொண்டு வருவானாயினன். ஓர் நாள் அவன் வைக்கோற் கட்டொன்றைக் கொண்டுவந்து உட்புறத்திலே அதனைப் போடும்போது, அவ்வுட்பக்கம் அவனுக்குத் தெரியாமையால் அவ்வைக்கோற்கட்டு அபுத்திபூர்வமாக இளங்கன்றொன்றின்மீது வீழ, அந்தக் கன்று இறந்து போயிற்று. இறந்துபோன கன்றைக் கண்டு பிராமணன் துக்கித்தான். அதை அறிந்த அக்ராரத்து மற்றப் பிராமணரனைவரும் வந்து பார்த்து, அவன் கோஹத்திசெய்தானென்று அவனைத் தூஷித்து, அவன்முகத்தைப் பார்க்கலாகாது என்று தவிர்த்தார்கள். தான் செய்த தீச்

செயலைநோக்கி வருந்துகின்ற பிராமணனுக்குச் சனங்கள் கூறும் நிந்தாவார்த்தைகள் புண்ணிலே உப்புநீர் சொரிந்தாற்போல விருந் தன. தனது பாவ நிவாரணத்தின் பொருட்டுப் பிராமணர் ஒருங்கு கூடிச் சந்தியா செபஞ்செய்யும் மடத்துக்குப்போய் அபுத்திபூர்வ மாகப் பசுவின்கன்றைக்கொன்றபாவத்தை அடைந்தேனே! இதற் குப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று அவர்களை நமஸ்கரித் துப் பிரார்த்தித்தான். இதைக்கேட்ட பிராமணர்கள் உதாசீன மாக அவனைப்பார்த்து உன்முகத்தை நாம் பார்க்கமாட்டோம்; நீ இவ்விடம்விட்டுப் போய்விடு என்று அவனைப் போக்கி, உரைத்து அவனைப்பார்த்த தோஷம் நீங்குமாறு சூரியதரிசனஞ் செய்தார் கள். தன்னைப் பிராமணர்கள் குற்சிதமாக நிந்தித்தமையால், அவன் அதிக துக்கமடைந்து பிசாசுபிடித்தவன்போலாயினன். அவன் போகும் மார்க்கத்தில் அக்கினீசுவரர் ஆலயத்தைத் தரிசித் துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்தான்; அப்பெருமானுரைத் தரிசித்த விசேடத்தினலே கலக்குண்ட அவனது மனசு சிறிது தெளிவுகொண்டு அதனல் நிர்மலபுத்தியுடையனுய், அரதத்தாசா ரியரைச் சரண்புகுவேனுபின், உறுதியாக அவர் தனது பாவ நிவா ரணத்திற்கு ஓர்வழி காட்டுவாரென்று கொண்டு, சிவபிரானிடத் திலே பாலியாவஸ்தையிலே அவர் ஞானம்பெற்றமையும், ஒழுகக் காய்ச்சிய அயாசனத்திலிருந்து பிரசங்கித்தமையும் எவர்களாலுஞ் செய்தற்கு எளியனவல்லவே என்று நிச்சயித்து அவருடைய கிருகத்துக்குள்ளே வந்து பிரவேசித்தான்; பிரவேசித்தபோது, துவாரத்து வாசற்படி அவன் தலையிலே யிடிக்க, உடனே "சிவசிவ" என்று சொல்லியிருந்தான். "சிவசிவ" என்று சொல் லியசப்தம் கிரகத்தினுள்ளே இருந்த அரதத்தாசாரியசுவாமிகள் திருச்செவியில் எய்திற்று. எய்தியவுடனே, தாம் செய்த காரி யத்தைவிடுத்து ஆனந்தசாகரத்தில் மூழ்கி, யாரோ பெரியவர் இவ் வேளையிலே சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு வந்தாரென்று நினைந்து வாசலிலே வந்து அவனை எதிர்கொண்டார். அவர் எழுந் தருளிவந்தபோது, அப்பிராமணன் ஆசாரியருடைய திருவடிக ளிலே தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கினன். அப்போது ஆசா ரியர் அவனைத் தமது திருக்கரத்தினல் எடுத்தணைத்து ஆலிங்கனஞ் செய்தார். "சிவபக்த சிரேட்டரே" நீவீர் எனது கிரகத்துக்கு எழுந்தருளினமையால், நான் தன்னியனுபினேன், எனதுகிரகமும் தன்னியமாயிற்று" என்று இங்ஙனஞ்சொல்லி, அவரை ஆசனத் தின்மீதிருத்தி உபசரித்தார். ஆசாரியர் தமக்கு இத்துணை மரி யாதை செய்தமையால் மிருதியும்ஆனந்தமடைந்து, அப்பிராமணன் பின்னர் இங்ஙனம்ஆலோசிப்பானுயினன். ஐயோ! நான்இருமுறை "சிவசிவ" என்று சொன்னமையால் இந்த மரியாதை கிடைத் ததே! என்னிடத்தில் மற்றோர் துக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கின்

றதே! அதனை இவரிடம்விஞ்ஞாபனஞ்செய்யாதொழியில் எனக்குப் பிராயச்சித்தம் கிடையாதென்றெண்ணி, ஆசாரியசுவாமிகளே! அடியேன் அபுத்தி பூருவமாகக் கோகத்தி செய்துவிட்டேன் உமது பாதங்களையே சரண் என்று அடைந்தேன், அடியேனைப் பாதுகாத்தருளுதிர் என்று வேண்டி, ஆனந்தபாஷ்பஞ் சொரிய அவர் திருவடிகளிலே வீழ்ந்து நமஸ்கரித்தான். இப்படிச் சொல்லிய பிராமணனைக் காருண்ணிய சாகரராகிய ஆசாரியர் நோக்கி, "நீர்செய்த கோகத்திக்குப் பிராயச்சித்தம் முடிந்துபோய்விட்டது. உமக்கு மோக்ஷம் எய்தியது" என்றார். சுவாமி! அடியேனுக்குப் பிராயச்சித்தம் எப்படிப் போந்தது? மோக்ஷம் எப்படி எய்திற்று! திருவாய் மலர்ந்தருளல்வேண்டும் என்றான். அப்போது அவர் நீவிர் முதற்சொல்லிய "சிவ" சப்தத்தினால் கோகத்திற்குப் பிராயச்சித்தம் எய்திற்று; இரண்டாவது "சிவ" சப்தத்தால் முத்தியும எய்திற்று என்றார். கிருபாமூர்த்தியுடைய அமிர்த வார்த்தையைக் கேட்டு, இருநிதியடைந்த வறியோன்போலஆனந்தமடைந்து, அந்த அமிர்த வார்த்தையைக் கேட்ட ஆராமையினாலே மீட்டும் மீட்டும் ஆசாரியசுவாமிகளை நமஸ்கரித்து ஆனந்தக் கூத்தாடினான். இதயத்திலேயுள்ள தாபம் அவனுக்குச் சாந்தியாயிற்று. அவனது முகமும் பிரசன்னமாயிற்று. இங்கு நிகழ்ந்தவனைத்தையுங் கண்டு கொண்டிருந்த பார்ப்பான் ஒருவன் அப்பிராமணனை நோக்கி, அதிகுரூரமாகிய கோகத்திபாவம் சிவநாமத்தினாலேநிவாரணமாகுமா? இரும்பைத்தின்று சுக்குக் கஷாயஞ் சாப்பிட்டால் சீர்ணமாய் விடுமா? பாவஞ்செய்யாதவராலே சிவன் துதிக்கற்பாலர். பாவிகள் அந்த நாமத்தினாலே எப்படிப் பரிசுத்தராவார்! என்றான். அதைக்கேட்ட ஆசாரியர் தம்மோடிருந்த பிராமணனை நோக்கி, சிவபிரானுடைய மாயை பிரம விஷ்ணுக்களையும் மயக்கிவிடுமே, இவனையா அது தப்பவிடும் என்றார். சிவநாமத்தினாலே ஒழிக்கத்தக்க பாவத்தைச் செய்பவர் இவ்வுலகிலே இல்லையாமாதலின், ஸ்மிருதிகளிலே இந்தச் சிவநாமம் பிராயச்சித்தமாக எடுத்துச் சொல்லப்படாது; அவ்வப்பாவங்களுக்கு இயைந்த பிராயச்சித்தங்கள் ஆங்குச் சொல்லப்பட்டுள்ளன. பாசுபதாஸ்திரத்துக்குக் கொசுகுகள் இலக்கில்லையாமாறுபோல, சிவநாமத்துக்குச் சர்வ பாவசமூகங்களும் இலக்கில்லையாமென்க. இவ்விஷயத்திலே எவனுக்குச் சந்தேகமுளதோ அவனுக்கு இன்பம் இல்லையாம்என்று இங்ஙனம் சொல்லிவிட்டு, இதைக்குறித்து விவாதஞ்செய்பவனைப் பார்த்தல் பாவமாய் முடிதலின், அதுபற்றி இவ்விடத்திலே யாதும் அறியாது குதர்க்கஞ்செய்கின்ற உன்னை நோக்குதல் எமக்கு இகழ்ச்சியாமாதலின், நீ இவ்விடம்விட்டுப் போய்விடுஎன்றுசொன்னார். சிவநாமத்திலே சந்தேகங்கொண்டமையால், ஆசாரியரால் உடனே திரஸ்கரிக்கப்பட்டு, அவன் அதிக பாவமும் பயமும்

எய்தி தன்வீடுநோக்கிப்போனான். கோகத்தி பாவத்தினின்று நீங்கிய பிராமணனை நோக்கி, நீர் எப்போதும் சிவநாம கீர்த்தனஞ்செய்யுமென்று சொல்லி, அவரை கிரகத்துக்குப் போகுதிர் என்று ஆஞ்ஞாபித்தார். இங்ஙனஞ் சந்தோஷத்தோடு சிவநாம கீர்த்தனஞ் செய்துகொண்டு போகும்பொழுது, அவன் பிராமணர்களை நோக்கி, சிவனுருடைய கிருபையினாலே சர்வஞ்ஞாதி குணங்களையுடைய அரதத்தாசாரியர் எனது பாவங்களெல்லாம் ஒழிந்து போய்விட்டன என்று சொன்னார் என்றான். அதைக் கேட்டுப் பிராமணர்கள் உனக்கு மகாபாதகமானது எப்படி விமோசனமாயிற்று என்று கேட்டார்கள். அதற்கு அவர் அவர்களை நோக்கி, நான் அவர் வாயிலில் நுழைந்தபோது, இருதரஞ்சிவநாமஞ்சொன்னேன், அவர் என்னை உபசரித்து, பக்தருடைய பீடையைப்போக்கும் சிவனுடையநாமம் இருமுறைஉச்சரிக்கப்பட்டபோதே,உமது கோகத்தி சந்தேகமின்றி நாசமாயிற்று. நீரும்சம்சாரத்தினின்று முக்தராயினீர் என்று சொன்னார் என்றான். இதைக் கேட்ட பிராமணர்கள் நன்று! நன்று! நீ சிவநாமத்தை உச்சரித்த மாத்திரத்திலே மகாகொடிய பாவம் எப்படி நீங்கும்! என்று பரிகசித்தார்கள். உடனே அவர்கள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட பிராமணன் ஆசாரியர் கிரகத்துக்கு வந்து அவர்கள் 'சொல்லிய வார்த்தையை அவருக்கு விண்ணப்பஞ்செய்தான். அதைக்கேட்டஆசாரியர் அவனைப் பார்த்து, ஒ பிராமணனே நீ அந்தப் பிராமணனிடத்திலே மீட்டும் போய் என்னசெய்தால் பாவம் நீங்கினமையையுற்று அவருக்குத் திருப்தியுண்டாகுமென்று கேட்டுவந்து எனக்குத் தெரிவி என்றார். அப்போது அவர் பின்னும் அங்குநின்றும் போய்ப் பிராமணர்களை நோக்கி, தமது ஆசாரியர் சொன்ன மொழியைச் சொல்லி, உங்கள் மனசு திருப்தியாதற்குத் தாம்யாது செய்தல்வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர்கள் அக்கினீசுரர் சன்னிதானத்திலுள்ள சிலாவிடபதேவர் நீர் கொடுக்கும் அறுகம்புல்லைச் சாப்பிடுமாயின், உமது சிவநாமத்தால் பிராயச்சித்தம் எய்தியது நிச்சயந்தான் என்றார்கள். அப்போது அவர் விரைந்து ஆசாரியரிடத்தில்வந்து சிவ சொரூபமாய் விளங்கும் ஆசாரியரை நமஸ்கரித்து, அவர்கள் சொல்லிய வார்த்தையைச்சொன்னார். ஆசாரியர் அவரைநோக்கி நீவிர் சிவபிரானைத் தியானித்துக்கொண்டு அறுகிருக்குமிடஞ் சென்று, அதனை எடுத்து நன்றாகத் தீர்த்தங்கொண்டு கழுவிக் கொண்டுபோய்க் கொடுக்குதிர், சந்தேகிக்கவேண்டாம் என்று ஆஞ்ஞாபிக்க, அவர் அப்போது போய், அறுகெடுத்து அதனை நன்றாகக் கழுவிச் சுத்திசெய்து அப்பிராமணர்களையும் அழைத்துக்கொண்டு அக்கினீசுவரர் ஆலயத்துக்குப் போந்து, அக்கினீசுவரப்பெருமானை நமஸ்கரித்து,இடபதேவருக்கு வலப்புறத்திலே அறுகம்புல்லைப் பிடித்துக்கொண்டு நின்று, அஷ்ட

மூர்த்தியாகிய சிவபிரானை வகிப்பவரே! தயாநிதியே! சிவநாமோச்சாரணத்தினால் என்பாவம் விமோசனமானால், இந்தப் புல்லைச்சாப்பிட்டு என்னை எப்போதும் ரக்ஷித்தருளுக என்று பிரார்த்திப்ப, அவ்விடபதேவர் தமது நாக்கை வலப்புறமாக நீட்டி, அவர்கையிலிருந்த புல்லைக்கிரகித்து சாப்பிட்டார். அப்போது அங்கு நின்ற பிராமணர் அனைவரும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து, அவ்வானந்தமேலீட்டினாலே அரதத்தாசாரியரைத்தோத்திரஞ்செய்து, அவரைநோக்கி பிராமணரே! இப்படிப்பட்ட சமாசாரம் எவ்விவிடத்துண்டு என்று வாழ்த்தி, உமது பாவமெல்லாம் போய்விட்டன, நீர் கிருதார்த்தராயினீர் என்றார்கள். அந்தப் பிராமணரெல்லாம் பின்னர் ஆசாரியரிடத்திலே வந்து அவரைச் சங்கர சொரூபி என்றும், அவருக்கும் சங்கரனுக்கும் பேதமில்லைஎன்றும் துதித்து வணங்கினார்கள். சிவபெருமான் சித்தவடிவராகிப் பாண்டியன் காணக் கல்லானைக்குக் கரும்புகொடுத்தருண்பித்தாரென்று சொல்லப்படுமாறுபோல, உமது ஆஞ்ஞையினாலே இந்த இடபமும்புல்லை வாங்கி உண்டுவிட்டது. உமக்குஞ் சிவபிரானுக்கும் பேதமில்லை; உமது பெருமையை யார் புகழ்ந்து முடித்தல் கூடுமென்று துதித்தார்கள். அப்போது சுவாமிகள் அவர்களைத் தத்தம் கிரகத்துக்குப் போமாறு ஆஞ்ஞை செய்ப, அவர்கள் சிவநாமத்துக்கு இத்தனை மகிமையுளதோ என்று வியந்து வீடுபோய்ச் சார்ந்தார்கள். அது கூட்டிய பிராமணர் நேத்திரங்களிலே நின்று ஆனந்தபாஷ்பஞ் சொரியச் சம்சாரபந்தத்தினின்றும் விமோசனராகி ஆசாரியர் சந்நிதியிலே நமஸ்காரஞ்செய்து, சுவாமீ! மகாபாதகனாகிய நான் உமது கிருபைக்குப் பாத்திரனாயினேன் என்றார். அப்போது ஆசாரியர் அவரை நோக்கி, இன்றுமுதல் சிவநாமோச்சாரணஞ்செய்து சிவபூசை முடித்துச் சிவாலயதரிசனஞ்செய்து வருதிரென்று கூறி, அவரைக் கிரகத்துக்கு அனுப்ப, அவர் சந்தோஷத்தோடு வீடு சார்ந்து சிவத்தியானாதி செய்துகொண்டு ஆசாரியர் நெறிபற்றி ஒழுகுவாராயினார்.

[இன்னும் வரும்]

---

# அறம்.

(விருதுபட்டி சைவப்பிரகாச சபாப் பிரசுரம்.)

---

தானநந் தவந் தருமஞ் சந்ததமுஞ் செய்வர் சிவ
ஞானந் தனை யணைய நல்லோர் பரா பரமே.

என்ற திருவாக்கின்படி பிறப்பிறப்பினீங்கி மீளாத முத்தியின்பத்தைத்தரத்தக்க சிவஞானத்தை யடைய விருப்பமுடைய உத்தமர்கள் மேற்கண்ட மூன்றையும் அன்போடு செய்தல் வேண்டும். தானமாவது கங்கை

முதலிய புண்ணிய தீர்த்தங்களிலும் க்ஷேத்திரங்களிலும், கோதான முத லியவைகளைச் சற்பாத்திரர்களுக்குச் செய்தலாம். இத்தானத்தைச் சற் பாத்திரர் அல்லாதவர்களுக்குச் செய்தால் அதன் பலனைக் கொடாது. இக்கருத்து நோக்கியே, திலமத்தனை பொன்னைச் சிவஞானிக் கீந்தால், பல முத்தி சித்தி பரபோகமுந் தரும். நிலமத்தனை பொன்னை நின் மூடர்க் கீந்தால், பலமுமற்றே பரபோகமுங் குன்றுமே." என்ற திரு மந்திர விதி எழுந்தது.

இனி தவமாவது:—காமக் குரோத முதலிய குற்றமான குணங்களை நீத்து ஐம்பொறி யடக்கல் இயம நியமம் முதலிய உத்தம குணங்களைக் கைக்கொண்டு ஈஸ்வரத் தியானஞ் செய்தலாம் "யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம்" என்ற திருவாக்கும் இதனையே வலி யுறுத்தும்.

இனி தருமமாவது -பசு (ஆன்மா) தருமம், பதி (சிவ) தருமம், என இருவகைத்து. அப்பசு தருமமாவது, அன்ன சத்திரம் தண்ணீர்ப் பந்தல் முதலியவை வைத்தலும் வறியார்க் கொன் றீவதே ஈகை என்றபடி வறியராய், திக்கற்ற வயோதிகராய், தொழில் செய்து சீவிக்க சக்தி யற் றவராய், பிணியாளராய், அங்கப் பழுதுடையரா யுள்ள எல்லோர்க்கும் "இயல்வது கரவேல்" என்ற திருவாக்கின்படி, தங்கள், தங்களா லியன்ற உதவியைப் புகழ் முதலிய உலகப் பயனைக் குறியாது சற்பாத்திரர், அசற் பாத்திர ரென்ற பேதமின்றி சீவகாருண்யத்தோடு செய்தலாம். இத னையே "ஈத லறம்," "மேலுலக மில்லெனினும் ஈதலே நன்று" என்ற திருவாக்குகள் வற்புறுத்து கின்றன.

இனி பதி (சிவ) தருமமாவது:—சிவாலயத் திருப்பணி செய்தல், சிவாலய சீரணோத்தாரணஞ் செய்தல், திருநந்தனவனம் வைத்தல், மஹே சுரர்களாகிய சிவனடியார் பூசை செய்தல், முதலியவைகளும், "எவ்வுயி ரும் பராபரன் சன்னிதியதாகும்" என்ற பிரமாணப்படி சகல வுயிர்களிடத் தும் சிவ பாவனை செய்து அவரவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தங் கள் தங்களால் இயன்றமட்டும் அன்போடு செய்தலுமாம். இதுவே பொரு ளைப்பெற்றதின் பிரயோசனமாம். இக்கருத்து நோக்கியே "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமென" நம் மணிவாசகப் பெரு மான்கட்டளை யிட்டுள்ளார்.

பிரதமத்தி லெடுத்துக் கொண்ட பிரமாணத்தின் வண்ணந் தானந் தவந் தருமம் என்ற மூன்றும் சிவஞானத்தை யடைவதற் கேதுக்களே. ஆனல் முதலிரண்டுஞ் செய்வதற்குப் பொருளும் சரீர ஒற்றுமையும் இன்றி யமையாதனவாயிருக்கின்றன. மூன்றாவது குறித்த தருமம் யாவராலும் எளிதிற் செய்யக் கூடியது.

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல், இறக்கும் பொழுது கொடு போவதில்லை இடைநடுவிற், குறிக்கு மிச்செல்வஞ் சிவன்

நந்த தென்று கொடுக்கறியா, திறக்குங் குலா மருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே.'' "ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமி, னிவ்வள வேனு மன்னத்தை யிட்டுண்மின்—தெய்வ, மொருவ னுளனென் றுணர வல்லீரே, லருவினைக ளேந்துமறும்'' என்ற திருவாக்குகள் இதனையே வலியுறுத்துகின்றன.

அன்பர்காள்!! மேற்கண்ட மூன்று எதுக்களில் தங்கள் தங்களுடைய தகுதிக் கேற்ப இயன்றவைகளை அன்போடு செய்தால் பெரும் புண்ணிய மாகிய சிவஞானத்தையே கொடுக்கு மென்பது திண்ணம்.

இதனுற் போந்த தொகைப் பொருள்—முத்தி யடைதற்கு சிவ ஞானமே உரித்தென்றும், அச்சிவஞான மெய்தற்கு மேற் கூறிய தானந் தவந் தருமம் என்ற மூன்றும் எதுக்க ளென்றும் தானமாவது, புண்ய க்ஷேத்திராதிகளில் சற்பாத்திரத்தில் கோதான முதலியவைகளைச் செய்த லென்றும், தவமாவது காமாதி குற்றங்களை நீக்கி இயம நியமாதி யோகங்க ளைச் செய்தலென்றும், தருமமாவது பசு தருமம், பதிதருமம், என இரு வகைப்பட்டு அன்னசத்திர முதலியவைகள் வைத்தல் பசு தருமமென்றும், சிவாலய திருப்பணி, நந்தனவனம் வைத்தல், மாகேசுர பூசை செய்தல் சகல ஆன்மாக்க ளிடத்தும் சிவ பாவனை செய்து அவரவர்களுக்கு வேண் டியவைகளை அன்போடு செய்தல் பதி தருமமென்றும், இவைகளில் ஒன்றை நோக்கி இது நம்மாற் செய்யக் கூடியதா வென்று கைவிடாமல் தத்தந் தகுதிக் கேற்ற தொன்றைச் செய்யினும் அதுவே சிவஞானத்தை யுதிப்பித்து முத்தியைக் கொடுக்கு மென்பதும் முடிந்த முடிபாம். இவற்றை நாமெல்லா மறிந் துய்யும் பொருட்டே நந்தாயுமான சுவாமிகள் "தானந் தவந் தருமஞ் சந்ததமுஞ் செய்வர் சிவ, ஞானந் தனையணைய நல்லோர் பராபரமே.'' என்று கட்டளை யிட்டருளினார்கள்.

இதிற்கண்ட வண்ணம் சிவ தருமங்களைச் செய்து எல்லாம் வல்ல இறைவன்றிருவருட்குப் பாத்திரராய் வாழ வேண்டுமென்று திருவருளைச் சிந்திக்கின்றேம். சுபம்.

---

## திருஞானசம்பந்தசுவாமிகள் பிருதாவளி

"ஸ்ரீ பரசிவ புத்ர ரத்ந குமாரகுருமண்ய தூலாவதார ஸ்ரீ பார்வதீஸ்தந்யபாநலப்த திவ்யஜ்ஞாந நிஸ்ருத ஸகல நிகமாகமஸார பூத த்ரவிட வேதப்ரவக்த்ரு ஸ்ரீமத் பரசிவகருணாஸமதிகத முக்தா மய சதுரந்தகாயமான சத்ரசாமர ஸ்ரீசிங்ஹகாஹளாதி ஸமஸ்த பிருதாவள்யாலங்க்ருதஜ் ஞானவிஜ்ஞாந சக்ரவர்த்தி ஸர்வஜனஸங்க ஸத்யோ நிர்வாண தீக்ஷாவ்யாபவர்க்க வருஷவிச்ராணந ஜீமூத பரமதகளபகேஸரி ஷண்மதப்ரதிஷ்டாபகாசாரிய ராஜாதிராஜ

பாண்ட்ய மஹாராஜகுரு க்ஷபண சாக்த்யாதி மஹாந்தகார நிவாரண ஜ்ஞாநபாநுவீக்ஷணநர்கார்க த்வஜோச்சேதந பூர்வக ஸ்ரீமத் வ்ருஷபத்வஜஸ்தாபக ஸ்ரீசைவஸமயகர்த்ரு ஸர்வஜ்ஞபீடாரூட ஸ்ரீஜகத்குரு''

இது காஞ்சீபுரம் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்த மஹாமடாலய பிருதாவளியிற் கண்டது.

——o——

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### அஷ்டோத்தரவிம்சதிநாவாமளி.

1. ஓம் ஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநம:
2. ஓம் ப்ரஹ்மபுரபரிப்ருடாயநம:
3. ஓம் பார்வதீஸ்தந்யபாயிநேநம:
4. ஓம் ஸுப்ரஹ்மண்யாபரமூர்த்தயேநம:
5. ஓம் சிவபாதஹ்ருதயமுனிபுங்கவஸுதாயநம:
6. ஓம் கௌண்டிந்யதிலகாயநம:
7. ஓம் அயோநிஸம்பவாயநம:
8. ஓம் ஸ்வபரப்ரகாசாயநம:
9. ஓம் ஸ்வயமேவாதிகதஸகலவித்யாகலாபாயநம:
10. ஓம் த்ரவிடவேதப்ரவக்த்ரேநம:
11. ஓம் ஜ்ஞானவிஜ்ஞாநசக்ரவர்த்திணேநம:
12. ஓம் பரமதகளபகேஸரிணேநம:
13. ஓம் சிவதத்ததாளஹஸ்தாயநம:
14. ஓம் முக்தாமயசதுரந்தயாநாதிரூடாயநம:
15. ஓம் சிந்ஹசாஹஸ்திபிருதாவள்யலங்க்ருதாயநம:
16. ஓம் பாண்ட்யராஜதேசிகாயநம:
17. ஓம் பாண்ட்யஜ்வராபஹர்த்ரேநம:
18. ஓம் க்ஷபணசாக்யாந்தகாரதபநாயநம:
19. ஓம் ராஜகந்யகாரோகநிவர்த்தகாயநம:
20. ஓம் வைச்யகுமாரகரளநிர்ஹரணாயநம:
21. ஓம் நிஷ்பலதாலபலதத்வகாரிணேநம:
22. ஓம் வாக்ஸந்தாரிததரணயேநம:
23. ஓம் வேதவநக்ஷேத்ரகவாடச்சாதநகாரிணேநம:
24. ஓம் அஸ்திஸாதிதகந்யகாயநம:
25. ஓம் விஷ்ணோச்சிவஸாரூப்யதாயிநேநம:
26. ஓம் சிவகுமாராயநம:
27. ஓம் ஸத்யோநிர்வாணதீக்ஷாகர்த்ருணேநம:
28. ஓம் ஸர்வமோக்ஷப்ரதகல்யாணஸுந்தராயநம:

திருச்சிற்றம்பலம்.

# சமயபேதம்.

(ஞானசித்திப் பிரசுரம்.)

எந்தச்சமயமாயிருந்தாலும் அதனால் ஆவதொன்றில்லை, எதனையும் கொள்ளலாம், எதைக் கொண்டாலும் மோட்சங்கிடைக்குமென்று சிலர் எண்ணுகிறார்கள். சமயமாவது கடவுள், ஆன்மா, பந்தம், நரகம், மோட்சம் என்னும் இவற்றைப்பற்றி விரித்துணர்த்தி, ஆன்மாவை முத்தியிற் சேர்ப்பிக்கும் சாதனமான ஒரு வழி. அந்த வழியினால் அடையப்படும் சாத்தியமான மோட்சம் ஒன்றாயிருக்கவேண்டுமேயன்றிப் பலவாயிருக்கக்கூடாது. மோட்சம் பலவாயிருந்தால் வழி பலவாயிருக்கலாம். அப்படியில்லாமையால் வழியும் ஒன்றாகவே யிருத்தல்வேண்டும். உலகத்திலே நாம் பார்க்கும்பொழுது சமயமாகிய வழியொன்றாயிராமல் பலவாயிருக்கின்றன. அப்படிப் பலவழியிருந்தாலும் ஒருவழிதான் நேர்வழியாயிருக்கவேண்டும். ஆதலால், எந்தச் சமயத்தையும் அநுட்டிக்கலாம் என்று சொல்லுதல் கூடாது. சில சமயங்கள் கடவுளொருவர் இலரென்கின்றன. சில சமயங்கள் ஆன்மாவை யில்லையென்கின்றன. சில சமயங்கள் புண்ணியத்தைப் பாவமாகவும் பாவத்தைப் புண்ணியமாகவும் கூறுகின்றன. சில சமயங்கள் பந்தமில்லையை மோட்சமில்லை யென்கின்றன. இப்படி எல்லாவகையாலும் எல்லாச்சமயங்களும் தடுமாற்றமுறுதலால், எல்லாவற்றையும் ஒரே தன்மையுடையனவென்று சொல்ல இடமில்லை. ஒன்றுக்கொன்று பேதமான கொள்கைகளையுடைய சமயங்கள் ஒவ்வொன்றும் பயன்தருமுறையிலும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டேயிருக்கவேண்டும். பயன் பலபடும்பொழுது எல்லாப்பயனையும் ஒன்றென்றாவது ஒரு தன்மை யுடையனவேயென்றாவது சொல்ல இயலாது. ஒன்று மெய்ப்பயனும் மற்றவை மெய்ப்பயனாகாதனவுமாயே யிருத்தல் வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது ஏதேனுமொரு சமயமும் அதன்பயனாகிய ஒரு மோட்சமுமே கொள்ளத்தக்கதாய் முடியும். அவ்வியல்பில்லாத மற்றவையெல்லாம் கொள்ளத்தக்கனவாகா. கொள்ளக்கூடாமைக்குக் காரணம் அவற்றால் மோட்சமாகிய பயன் கிடையாமையேயாம். அன்றியும் சில சமயங்கள் பாவத்தைப் புண்ணியமாக விதித்தலால், ஒருவன் அந்தச் சமயபோதனையைக் கைக்கொண்டாற் பாவஞ்செய்து நரகத்தையடையவேண்டியவனாவான். அதுவன்றி, அந்த நரகத்தை யடையாவிட்டாலும் மோட்சம் கிடையாமையால், பந்தமே கிடைப்பதாகும். இப்படி பந்தத்துக்கு இடமான சமயங்களை அநுட்டிப்பதும் மோட்சாதனமான சமயத்தையநுட்டிப்பதும் என்று சமயக்கொள்கை இரண்டு வகைப்படுதலால், பந்தத்துக்கு இடமின்றி மோட்சத்துக்கு வாயிலான

சமயத்தைக் கொள்ளுதலே விவேகமாம். கடவுள் இயல்பும் ஆன்ம வியல்பும் பந்தமோட்சவியல்பும் இவையிவையென நன்றாக எடுத்துரைத்து நல்வழியில் நிறுத்தும் சமயமெதுவோ அதனைக் கொள்ளுதலே அறிவுடைமையாம். இதைவிட்டு எதனையுங்கொள்ளலாமென்றல் அறிவுடைமையாகாது.

உலகத்துள்ள சமயங்களெல்லாவற்றுள்ளும் வேதாகமபுராண இதிகாச ஸ்மிருதியென்னும் நூல்களாற் பிரதிபாதிக்கப்படும் சைவசமயமே கடவுள் இத்தன்மையுடையவரென்றும், ஆன்மா இவ்வியல்புடையதென்றும், அவ்வான்மாவுக்குப் பந்தம் வந்த வகை இவ்வாறென்றும், அது நீங்கி ஆன்மா முத்தியடைதல் இவ்வழியாலென்றும் விரித்தோதி நல்வழியில் நிறுத்தி முத்தியைத் தருவதாயிருக்கின்றதென்பது விவேகமுடையார்க்கு இனிது விளங்குதலின், நாம் கொள்ளுமிடத்து அதனையே கொள்ளவேண்டுமென்பதும், சைவசமயத்திலே பிறந்துள்ளவர்கள் அவ்வருமையான சைவசமயத்தை விட்டு அங்கியமாய்ப் பயனற்றனவான பிற சமயங்களைக் கொள்ளப்படாதென்பதும் உண்மையாம். அநேகர் சைவசமயத்திலே பிறந்தும் அதன் அருமையை யறியாமல், அழிந்துபோகின்ற இந்த உடலைச் சதமென்று நம்பி வயிறு வளர்த்தலே காரணமாக, சைவசமயத்தைக் கைவிட்டு அங்கியசமயங் கொண்டு ஆன்மலாபத்தை இழந்து போகின்றனர். அநேகர் சமயம் இவ்வளவு பயனுடையதென்று அறியாமல், சைவசமயத்திலே இருந்தும் சமயாநுட்டானங்களைக் கைக்கொண்டு ஒழுகி அதன் பயனைப் பெற நினையாமல் உலக வாழ்வே பெரிதென்று எண்ணியிருந்து மோசம்போகின்றனர்.

ஒருவன் தான் பிறந்து கைக்கொண்ட சமயம் எதுவோ அதனைக்கொண்டு நடத்தல் அவனுக்குக் குற்றமாகமாட்டாது. அவன் உண்மையான மோட்சத்தை யடையாவிட்டாலும் முன் செய்த கர்மத்துக்கு ஏற்ப அவனுக்குக் கிடைத்தசமயம் எதுவோ அதனைக்கொண்டொழுகி அதன் பயனைப்பெறலாம். ஆனால், மோட்சத்துக்கு ஏதுவான ஆசாரங்களையுடைய சைவசமயத்திற் பிறந்தோன் அதனைவிட்டு வேறொன்றைக்கொண்டு, அந்தமோட்சத்தை இழத்தல்மட்டும் கூடாதசெயலேயாம். ஆதலால்எந்தச்சமயத்தைக் கொள்ளினும் குற்றமில்லை, எதனையும் கொள்ளலாம் என்பது ஒப்பத்தக்கதன்று. அதினும் சைவசமயிகள் சைவசமயத்தையே கொள்ளவேண்டும். பிறிதொன்றைக் கொள்ளலாகாது.

---

உ

# சந்தாதாரர்களுக்கு விஞ்ஞாபனம்.

ஐயன்மீர்,

இப்பத்திரிகைக்கு முதலாம் ஆண்டில் 520 சந்தாதாரர்கள் இருந்தார்கள். அப்போது ஒவ்வோரிதழும் 16 பக்கங்களோடு வெளிவந்தது. 1000 பிரதிகளே அச்சிடப்பட்டன. அவ்வருடத்தில் பத்திரிகையினால் கிடைத்தபொருள் ரூபா 378. செலவான பொருள் ரூபா 344. காகிதத்தின் விலையும் ரீம் ஒன்றுக்கு ரூபா இரண்டே.

இப்போது (வருடம் ஒன்றுக்கு) ஏறத்தாழ 1000 சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் 200 பேர் ஆயுள் சந்தாதாரர்கள். இவர்கள்பொருட்டு 1500 பிரதிகள் அச்சிடப்படுகின்றன. பிரதிஒவ்வொன்றும் 24 பக்கங்களாக மாதமாதம் வெளியிடப்படின் வருடம் ஒன்றுக்கு (டைட்டில்பேஜ் நீங்கலாக) 36 பாரமாகிறது. இதற்கு 54 ரீம் காகிதம் வேண்டும். இதின்விலை இப்போது ரீம் ரூபா 9-3-0 வீதமாக ரூபா 496 (அதாவது சுமார் 500 ரூபா) ஆகிறது. இதற்குமேல் மற்ற செலவுகளும் சேர்ந்து அடியிற்கண்ட விவரப்படி வருடம் ஒன்றுக்கு 1300 ரூபா செலவாகும். இதற்கு ஆயுள்சந்தாதாரர் நீங்கலாக 1300 சந்தாதாரர்கள் இருந்தால் இப்பத்திரிகை கிரமமாய் நடைபெறலாம். அச்சுக்கூடம் வைத்துக்கொண்டால் அநுகூலமாயிருக்குமென்று எதிர்பார்த்து ஆயுள் சந்தாதாரர்கள் கொடுத்த சந்தாத்தொகையைக் கொண்டு அச்சுக்கூடம் வைத்துக்கொண்டோம். ஆனால் இப்போதுள்ள காலநிலையில் இன்னும் 2000 ரூபாமுதல் வைத்தால்மாத்திரம் அச்சுக்கூடத்தினால் இலாபம் பெறலாம். அதுகூடாமையால் இதுவரையில் நட்டமே உண்டாயிற்று.

இவ்வருடம் இதுவரையில் கிடைத்திருக்கும் சந்தா (பழைய பிரதிகள் விற்றவரவு சேர்த்து) ரூபா 698. இப்பத்திரிகையின் பொருட்டுச்செலவான தொகை ரூபா 292. இப்போதுகையிருப்பது 406 ரூபாவே. இதைக்கொண்டும், இனி இவ்வருடம் சேரும் சந்தாதாரர்கள் கொடுக்கும் சந்தாத்தொகையைக் கொண்டும், பழையபத்திரிகை விற்பனையைக் கொண்டும் இவ்வருடம் டிசம்பர்மீ வரையில் இப்பத்திரிகை நடைபெறச்செய்தல் வேண்டும். ஆதலால் பத்திரிகையைத்தாமதித்தும், பக்கங்களைக் குறைத்தும் வெளியிடநேர்கின்றது. இவ்வாறு நேர்வதற்கு யாம் மிகவருந்துகின்றோம். யாம் யாதொருபிரதிபலனையும் எதிர்நோக்காமல் இப்பத்திரிகையைவெளியிடுவதனால் சைவாபிமானிகள் எமக்குத்துணையாயிருந்து இதைநடத்துவித்தல்வேண்டும். இவ்வாறுசெய்

தலைத்தவிர்த்து "நம்மவர்கள் பத்திரிகையைக் கிரமமாய் நடத்துகிறதில்லை" என்று குறைகூறுவது குறைகூறுவோர் குற்றமேயாம்.

சிலர் வர்த்தமானப் பத்திரிகைகள் பல கிரமமாய் நடைபெறும்போது நம்சைவப் பத்திரிகைமாத்திரம் ஏன் அவ்வாறு நடைபெறக் கூடாதென்கின்றனர். வர்த்தமானப்பத்திரிகைகளுக்கு மூலதனம் வைத்து நடத்துவிக்கப் பலர் போட்டி போட்டுக் கொண்டுவருகின்றார்கள். பல்லைக்காட்டிக் காலில்வீழ்ந்து கெஞ்சினும் மூலதனம்வைத்துச் சைவப்பத்திரிகைகளை நடத்தும் சைவாபிமானிகள் எவரும் இல்லை. அப்பத்திரிகைகள் ஆயிரக்கணக்காகப் பரவுகின்றன. சைவப்பத்திரிகையை வாங்குவோர் சைவருள்ளும் மிகச்சிலரே. அப்பத்திரிகையின் ஆசிரியர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் சம்பளமோ இலாபமோ பெறுகிறார்கள். சைவப்பத்திரிகாசிரியர் தன் சொந்தபொருளையும் செலவிட்டுப் பத்திரிகையை நடத்தவேண்டியதாயிருக்கிறது. சைவசமயிகளுள் பக்திமான்களும், கொடையாளிகளும் பலர்இருந்தும் இவர்களுக்கு இப்பத்திரிகையை முன்னின்று நடத்துவிப்பது உத்தமோத்தம சிவபணியென்பது தெரியவில்லை இது சைவசமயத்தின் துர்ப்பாக்கியம் போலும். ஆதலால் சந்தாதாரர்கள் யாம் வஞ்சகமின்றி உலகம் உய்வது கருதி இப்பத்திரிகையை வெளியிட்டுவருகின்றோமென்பதையும், இதில்நேரிடும் குறைஎதுவும் காலநிலைமையைப் பொறுத்ததென்பதையும் மறக்கலாகாது.

இப்பத்திரிகையை மாதமாதம் மூன்றுபாரமாக வெளியிடுவதனால் நேரிடக்கூடிய செலவின் விவரம்.

| | ரூபா |
|---|---|
| காகிதம் 54 ரீம் | 496 |
| டைட்டில்பேஜ்காகிதம் | 27 |
| விலாசம் எழுதும் காகிதம். | 15 |
| அச்சுக்கூலி | 216 |
| கட்டடம் (கைதத்தல்முதலியன) | 60 |
| தபால் | 250 |
| லிகிதர் சம்பளம் | 180 |
| வீட்டுவாடகை | 60 |
| மை - கடிதம் - வண்டி முதலிய சில்லரை செலவுகள் | 25 |
| ஆகமொத்தம். | 1329 |

# மலேரியா காய்ச்சல்.

(அரசாங்கப் பிரசுரம்)

---

## (டாக்டர் யூ—ராமராவு.)

### காரணமும் குறிகளும்.

1. இரத்தத்தில் அதை உறிஞ்சுகின்ற மிகவும் சிறிய கிருமிகள் இருப்பதால் இந்த முறை காய்ச்சல் உண்டாகின்றது. இந்தக் கிருமிகள் இரத்தத்திலிருந்துகொண்டு விர்த்தியாகின்றன. ஷெ கிருமிகளின் எண்ணிக்கை ஏராளமான உடனே ஜுரத்தைக் கொண்டு வருகிறது.

2. மலேரியா கிருமிகள் இருப்பதின் முக்கியமான அடையாளம் யென்னவென்ருல் சாதாரணமாய் தீர்மானிக்கக்கூடிய ஓர்விதமான ஜுரம் வருவதுதான். இந்த ஜுரம் அடிக்கடி தணிந்து விடுகின்றது. தேக உஷ்ணமானது ஒருவேளை சமஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து மறுபடியும் உயரும். இச்ஜுரம் வழக்கமாக ஏற்பட்ட காலக்கிரமங்களில் வரும். 24 மணிக்கு ஒருதடவையாவது, 48 மணிக்கு ஒருதடவையாவது, அல்லது 72 மணிக்கு ஒருதடவையாவது வரும்.

3. எந்தவிதமான ஜுரமாயிருந்தபோதிலும் அதற்கு மூன்று நிலைமைகளுண்டு: குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில் தேகமுழுமையும், தலை முதல் கால்வரையில், நடுக்கமுண்டாகும். இந்த குளிர்ந்த நிலைமையிலிருந்தும் உஷ்ணம் மாத்திரம் அதிகமாய்க் கொண்டுவரும். சிறு நேரத்தின் பிறது நடுக்கம் நின்றுபோய் உஷ்ணம் மாத்திரம் 103 அல்லது 104 சில வேளைகளில் 105 டிக்கிரீ அல்லது அதற்கு மேலும் அதிகமாகும். சுமார் ஒருமணி நேரத்தின் பிறகு உஷ்ண நிலைமை மறைந்துபோய் நோயாளிக்கு விசேஷமாக வேர்வைவிட்டு ஜுரமும் சீக்கிரம் குறைந்துவிடுகிறது.

### தடுக்கும் முறை.

4. முறை ஜுரம் தொத்து வியாதி. அது கொசுக்கள் மூலமாய் பரவுகிறது. முறை ஜுரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால் அம்மனிதன் உதிரத்திலிருக்கும் கிருமிகளில் சிலது அக்கொசுவின் வயிற்றில் புகும். அது அனுபலிஸ் சாதியில் சேர்ந்

தலைத்தவிர்த்து "நம்மவர்கள் பத்திரிகையைக் கிரமமாய் நடத்துகிறதில்லை" என்று குறைகூறுவது குறைகூறுவோர் குற்றமேயாம்.

சிலர் வர்த்தமானப் பத்திரிகைகள் பல கிரமமாய் நடைபெறும்போது நம்சைவப் பத்திரிகைமாத்திரம் என் அவ்வாறு நடைபெறக் கூடாதென்கின்றனர். வர்த்தமானப்பத்திரிகைகளுக்கு மூலதனம் வைத்து நடத்துவிக்கப் பலர் போட்டி போட்டுக் கொண்டுவருகின்றார்கள். பல்லைக்காட்டிக் காலில்வீழ்ந்து கெஞ்சினும் மூலதனம்வைத்துச் சைவப்பத்திரிகைகளை நடத்தும் சைவாபிமானிகள் எவரும் இல்லை. அப்பத்திரிகைகள் ஆயிரக்கணக்காகப் பரவுகின்றன. சைவப்பத்திரிகையை வாங்குவோர் சைவருள்ளும் மிகச்சிலரே. அப்பத்திரிகையின் ஆசிரியர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் சம்பளமோ இலாபமோ பெறுகிறார்கள். சைவப்பத்திரிகாசிரியர் தன் சொந்தபொருளையும் செலவிட்டுப் பத்திரிகையை நடத்தவேண்டியதாயிருக்கிறது. சைவசமயிகளுள் பக்திமான்களும், கொடையாளிகளும் பலர்இருந்தும் இவர்களுக்கு இப்பத்திரிகையை முன்னின்று நடத்துவிப்பது உத்தமோத்தம சிவபணியென்று தெரியவில்லை இது சைவசமயத்தின் துர்ப்பாக்கியம் போலும். ஆதலால் சந்தாதாரர்கள் யாம் வஞ்சகமின்றி உலகம் உய்வது கருதி இப்பத்திரிகையை வெளியிட்டுவருகின்றோமென்பதையும், இதில்நேரிடும் குறைஎதுவும் காலநிலைமையைப் பொறுத்ததென்பதையும மறக்கலாகாது.

இப்பத்திரிகையை மாதமாதம் மூன்றுபாரமாக வெளியிடுவதனால் நேரிடக்கூடிய செலவின் விவரம்.

| | ரூபா |
|---|---|
| காகிதம் 54 ரீம் | 496 |
| டைட்டில்பேஜ்காகிதம் | 27 |
| விலாசம் எழுதும் காகிதம். | 15 |
| அச்சுக்கூலி | 216 |
| கட்டடம் (தைத்தல்முதலியன) | 60 |
| தபால் | 250 |
| லிகிதர் சம்பளம் | 180 |
| வீட்டுவாடகை | 60 |
| மை - கடிதம் - வண்டி முதலிய சில்லறை செலவுகள் | 25 |
| ஆகமொத்தம். | 1329 |

# மலேரியா காய்ச்சல்.

(அரசாங்கப் பிரசுரம்)

---

(டாக்டர் யூ—ராமராவு.)

## காரணமும் குறிகளும்.

1. இரத்தத்தில் அதை உறிஞ்சுகின்ற மிகவும் சிறிய கிருமிகள் இருப்பதால் இந்த முறை காய்ச்சல் உண்டாகின்றது. இந்தக் கிருமிகள் இரத்தத்திலிருந்துகொண்டு விர்த்தியாகின்றன. ஷெ கிருமிகளின் எண்ணிக்கை ஏராளமான உடனே ஜுரத்தைக் கொண்டு வருகிறது.

2. மலேரியா கிருமிகள் இருப்பதின் முக்கியமான அடையாளம் யென்னவென்றால் சாதாரணமாய் தீர்மானிக்கக்கூடிய ஓர்விதமான ஜுரம் வருவதுதான். இந்த ஜுரம் அடிக்கடி தணிந்து விடுகின்றது. தேக உஷ்ணமானது ஒருவேளை சமஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து மறுபடியும் உயரும். இச்ஜுரம் வழக்கமாக ஏற்பட்ட காலக்கிரமங்களில் வரும். 24 மணிக்கு ஒருதடவையாவது, 48 மணிக்கு ஒருதடவையாவது, அல்லது 72 மணிக்கு ஒருதடவையாவது வரும்.

3. எந்தவிதமான ஜுரமாயிருந்தபோதிலும் அதற்கு மூன்று நிலைமைகளுண்டு: குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில் தேகமுழுமையும், தலை முதல் கால்வரையில், நடுக்கமுண்டாகும். இந்த குளிர்ந்த நிலைமையிலிருந்தும் உஷ்ணம் மாத்திரம் அதிகமாய்க் கொண்டுவரும். சிறு நேரத்தின் பிறது நடுக்கம் நின்றுபோய் உஷ்ணம் மாத்திரம் 103 அல்லது 104 சில வேளைகளில் 105 டிக்கிரீ அல்லது அதற்கு மேலும் அதிகமாகும். சுமார் ஒருமணி நேரத்தின் பிறகு உஷ்ண நிலைமை மறைந்துபோய் நோயாளிக்கு விசேஷமாக வேர்வைவிட்டு ஜுரமும் சீக்கிரம் குறைந்துவிடுகிறது.

## தடுக்கும் முறை.

4. முறை ஜுரம் தொத்து வியாதி. அது கொசுக்கள் மூலமாய் பரவுகிறது. முறை ஜுரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால் அம்மனிதன் உதிரத்திலிருக்கும் கிருமிகளில் சிலது அக்கொசுவின் வயிற்றில் புகும். அது அனபலிஸ் சாதியில் சேர்ந்

தவைப்போன்ற ஓர்விதமான கொசுவாயிருந்தால் அதனுடைய வயிற்றில் அந்தக் கிருமிகள் அபிவிருத்தியடைந்து வயிற்றிலிருந்து ரத்தம் வியாபிப்பதால் வாயின் எச்சலில் சேரும். அந்தக்கொசு ஒருவனை கடிக்கும்போது இந்த விஷத்தை அம்மனிதன் ரத்தத்தில் பிரவேசிக்கச் செய்கிறது. பிறகு யாருடைய ரத்தத்திலிருந்து அந்த விஷம் யெடுக்கப்பட்டதோ அவனுக்கு நேர்ந்த ஜுரம்போலவே இவனுக்கும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் மலேரியா ஜுரங்கள் கொசுக் கடியினல்தான் உண்டாகின்றன.

5. முன்னெரு காலத்தில் நினைத்திருந்தபடி நமக்கு மலேரியா ஜுரம் அசுத்தமான ஜலம் பானம்செய்வதினலாவது பூமியிலிருந்து அசுத்தமான காற்றை கிரஹிப்பதினலாவது உண்டாவதில்லை. ஜலமும் காற்றும் மலேரியாவுக்கு எவ்விதமாக சம்மந்தப்பட்டவை யென்றால் அவைகள் மலேரியாவைக் கொண்டுவரும் கொசுக்களுக்கு இருப்பிடமாக இருக்கின்றன. மலேரியா ஜுரங்கள் கொசுக்கள் மூலமாய்த்தான் வியாபிக்கிறதென்பதும் ஒரு மனிதனிடத்திலிருந்து மற்றெருவனுக்கு வேறே எவ்விதமாயும் பரவச் செய்ய முடியாதென்பதும் நிச்சயமாய் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

6. ஆகையினல் கொசுக்கடிக்காமல் தடுப்பதே முக்கியமான காரியம். இதை செய்வதற்கு இரண்டுவழிகள் உண்டு:—(a) உங்களுக்குச் சமீபமாய் இருக்கிற கொசுக்கள் உங்களைக்கடிக்காமல் பார்த்துக் கொள்ளலாம், (b) நீங்கள் இருக்கிற இடத்திற்குச் சமீபமாய் கொசுக்கள் இல்லாமலும் செய்துகொள்ளலாம்.

(a) கோசுக்கள் உங்களைக் கடிக்காமல் தடுப்பது.

7 முத்தின கொசுக்கள் சூரிய உஷ்ணத்தைத் தாங்காது. ஆகையினல் அந்தக் கொசுக்கள் பகற்காலத்தில் வெப்பமாகயிருக்கும் பொழுது வீடுகளில் புகுந்து அடங்குகின்றன. அப்படிச் செய்வதினல் பகற் காலத்தில் கொசுகடிக்கும் என்ற பயம் அதிகம் இல்லை. அனோபிலீஸ் என்னும் கொசுக்களின் முக்கிய குணம் அவை இராத்திரியில்மட்டும்தான் கடிக்கும் (அதாவது சூரியன் மறைவதற்கும் மறுபடியும் எழும்புவதற்கும் இடையில்தான்). ஆகையால் பகற் காலத்தைப் பார்க்கிலும் இராக்காலத்தில் விஷஜுரம் அதிகமாய் உண்டாவதற்கு எது இருக்கிறது.

(தொடரும்.)